அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 159/2017

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பி.சா.2 | 27.04.2026 |
| பெயர் சுரேஷ்கோவிந்தன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

குறுக்கு விசாரணை:-

1. Sun ink jet printers & services and Sun ink jet printers & solutions ஆகிய 2 நிறுவனத்திற்கும் என்ன ஒற்றுமை என்றால் இரண்டும் வேறு வேறு நிறுவனம் ஆகும். இரண்டு நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. Sun ink jet printers & services நிறுவணத்தை எப்போது மூடப்பட்டது என்றால் சுமார் 2014 வருடம் இருக்கும். பார்ட்னர்சிப்பில் இருந்த நிறுவணத்தை எவ்வாறு மூடுவார்கள் என்றால் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. Sun ink jet printers & services மூடப்பட்ட தேதி எனக்கு சரியாக தெரியாது என்றாலும் Sun ink jet printers & solutions ஆரம்பித்த தேதி ஞாபகம் உள்ளதா என்றால் மார்ச் 2014. Sun ink jet printers & services மூடியபோது அக்கவுண்ட்ஸ் முடித்துக்காட்டப்பட்டதா என்றால் 2ம் வாதி

உதயகுமார் பார்த்துக்கொண்டார்.

2. தற்போது வரை நான் அக்கவுண்ட்ஸ் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. AY 2015 – 2016 வருடத்திற்கு Sun ink jet printers & services நிறுவனத்திற்கு வருமானவரி காட்டினேனா என்றால் காட்டியுள்ளேன். 2 ம் வாதியிடம் கணக்கு விவரங்கள் இருந்தபோது எவ்வாறு நான் வருமாணவரி தாக்கல் செய்தேன் என்றால் ஆடிட்டர் மூலம் தாக்கல் செய்தேன். நான் கூறும் மேற்கூறிய ஆடிட்டர் தான் Sun ink jet printers & solution நிறுவணத்திற்கும் ஆடிட்டர் என்றால் சரிதான். Sun ink jet printers & services முறைபடி மூடாமல் Sun ink jet printers & solution நிறுவனம் தொடங்கியது சரியா தவறா என்றால் தெரியாது. Sun ink jet printers & services மற்றும் Sun ink jet printers & solution நிறுவணங்களுக்கு ஒரே வாடிக்கையாளர்கள் பட்டியல் உள்ளது என்றால் சரியல்ல வேறுவேறு வாடிக்கையாளர்கள் உள்ளார்கள். உதாரணம் சொல்லமுடியுமா என்றால் central porduct diary , kerala , போன்ற வாடிக்கையாளர் மாறுபடுவார். Sun ink jet printers & services ல் இருந்து சுமார் 10% வாடிக்கையாளர் தான் Sun ink jet printers & solution ல் ஒன்றாக உள்ளார்கள். 3 ம் பிரதிவாதி நிறுவனத்தில் சென்னையில் 60% வாடிக்கையாளரும், கேரளாவில் 40%வாடிக்கையாளரும் உள்ளார்கள்.

3. நான் வாதியை ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 e mail ஆவணத்தில் என்பெயரில் தான் mail அனுப்பப்ட்டுள்ளது. ஆனால் நான் அதை அனுப்பவில்லை. 1 ம் பிரதிவாதி எனக்கு பதிலாக அனுப்பினாரா என்றால் தெரியாது. நான் மெயில் மூலம் Sun ink jet printers & services நிறுவணத்தில் உள்ள 100 வாடிக்கையாளருக்கு Sun ink jet printers & solution நிறுவணத்திற்கு வருமாறு மெயில் செய்துள்ளேன் என்றால் நான் செய்யவில்லை. யார் அனுப்பியது என்றால் தெரியாது. Sun ink jet printers &

services நிறுவனத்தில் Indian Bank, முகப்பேர் West மற்றும் HDFC முகப்பேர் West வங்கி கணக்குகள் தற்போது மூடப்படவில்லை என்றால் சரிதான். நான் 2ம் வாதியை ஏமாற்றி Sun ink jet printers & solution நிறுவனத்தை ஆரம்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கை எதற்காக வாதிதாக்கல் செய்தார் என்றால் கம்பெனி கணக்கு விவரத்தை கேட்டு தாக்கல் செய்துள்ளார். தற்போது வரை நான் 1ம் வாதி கம்பெனியின் கணக்கு விவரம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதற்காக வழக்காடுகிறேன் என்றால் வாதிஎன்மீது வழக்கு தாக்கல் செய்ததால் வருகிறேன். நான் 2ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி சேர்ந்து தான் Sun ink jet printers & services நிறுவனத்தை தொடங்கினோம் என்றால் சரிதான் தலா ரூ5லட்சம் மொத்தம் ரூ15லட்சம் வைத்து 1ம் வாதி நிருவனத்தை தொடங்கினேன். 1ம் வாதி நிறுவனம் மூடப்பட்டபோது அதன் லாபநஷ்ட கணக்குகளை சரிபார்த்து 2ம் வாதியிடம் கொடுத்தேனா என்றால் Proper ஆக மூடவில்லை.

5. Sun ink jet printers & services மூடும்போது நாங்கள் 3பேரும் சேர்ந்து ஆடிட்டரை பார்த்தோமா என்றால் இல்லை. Sun ink jet printers & services நடத்தியபோது அதன் இலாபநஷ்ட கணக்குகளை நான் எடுத்து அதன் விவரத்தை கையில் வைத்துள்ளேனா என்றால் அனைத்து ஆவணத்தையும் 2ம் வாதியிடம் கொடுத்துவிட்டேன். Sun ink jet printers & services நிறுவனத்தை மூடும்போது 2ம் வாதிக்கு ரூ5லட்சம் கொடுத்தேனா என்றால் இல்லை. Sun ink jet printers & services நிறுவனத்தை 2ம் வாதிதான் மூடினார் நான் மூடவில்லை. Sun ink jet printers & services மூடும்போது நான் 2ம் வாதி , 1ம் பிரதிவாதி சேர்ந்து ஆடிட்டரை பார்த்ததாக 1ம் பிரதிவாதி அவரது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லி சாட்சியம அளித்துள்ளார் என்றால் 2ம் வாதி வரவில்லை. நானும்

1ம் பிரதிவாதிதான் செல்வோனம்.

6. Sun ink jet printers & services நிறுவணத்தை ஆரம்பத்தில் எங்கு வைத்திருந்தோம் என்றால் 2ம் வாதி வீட்டில். 2ம் வாதி வீட்டில் நிறுவனம் வைப்பதற்கு நானும் 1ம் பிரதிவாதியும் ஒப்புக்கொண்டோம் என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் 2ம் வாதி வீட்டின் பின்னால் நிறுவனம் இருந்ததால் அவர் கையாடல் செய்துவிட்டார் என்று நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. Sun ink jet printers & services நிறுவனத்தில் இருந்து ரூ10லட்சம் நானும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து மோசடி செய்துவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் வாதியின் நிறுவனத்தில் இருந்து வந்த லாபத்தை பயன்படுத்தி நானும் 1ம் பிரதிவாதியும் அவர்அவர் மனைவின் பெயரில் சொத்து வாங்கிகொண்டோம் என்றால் சரியல்ல. Sun ink jet printers & services நிறுவனத்தை சரியாக மூடாமல் 3ம் பிரதிவாதி நிறுவனத்தை ஆரம்பித்துள்ளோம் என்றால் நிறுவனத்தை மூடுவதற்கான ஆவணம் அனைத்தும் 2ம் வாதியிடம் தான் உள்ளது.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.